செய்திக் குறிப்பு

செய்தி வெளியீடு எண்: 241 நாள்: 24/7/17

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2014–2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் விதி 110ன்கீழ் வெளியிட்ட அறிவிப்பைத் தொடர்ந்து "சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றும் இளைஞர்களது பணியை அங்கீகரிக்கும்பொருட்டு, 2015ஆம் ஆண்டு முதல் முதலமைச்சர் மாநில 'இளைஞர் விருது" ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று 15 முதல் 35 வயது வரையுள்ள 3 ஆண்கள் மற்றும் 3 பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது ரூ.50,000/– ரொக்கம், பாராட்டுப் பத்திரம் மற்றும் பதக்கம் ஆகியவைகளை உள்ளடக்கியதாகும்.

அதன்படி, 2017ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் மாநில இளைஞர் விருது எதிர்வரும் 15.08.2017 அன்று நடைபெறும் சுதந்திர தின விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட உள்ளது. இவ்விருது தொடர்பாக கீழ்க்காணும் தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

1) 15 முதல் 35 வயது வரையுள்ள ஆண்/பெண் ஆகியோர் விண்ணப்பிக்கலாம். கடந்த ஏப்ரல் 1, 2016 அன்று 15 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும் மற்றும் மார்ச் 31, 2017 அன்று 35 வயதுக்குள்ளாக இருத்தல் வேண்டும்.
2) கடந்த நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் மட்டுமே பரிசீலிக்கப்படும்.
3) விருதிற்கு விண்ணப்பிக்கும் முன்பு குறைந்தபட்சம் 5 வருடங்கள் தமிழகத்தில் குடியிருந்தவராக இருத்தல் வேண்டும். (சான்று இணைக்கப்பட வேண்டும்)
4) விண்ணப்பதாரர்கள் சமுதாய நலனுக்காக தன்னார்வத்துடன் தொண்டாற்றியிருக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்த தொண்டு, கண்டறியப்படக் கூடியதாகவும், அளவிடக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.
5) மத்திய/மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள்/கல்லூரிகள்/பள்ளிகளில் பணியாற்றுபவர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பிக்க இயலாது.
6) விண்ணப்பதாரருக்கு உள்ளூர் மக்களிடம் உள்ள செல்வாக்கு விருதிற்கான பரிசீலனையில் கணக்கிற்கொள்ளப்படும்.
7) விண்ணப்பப் படிவம் மற்றும் இதர விவரங் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய இணைய தளத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். இணைய தளத்தின் முகவரி **www.sdat.tn.gov.in** ஆகும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வேலூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் 26.07.2017 மாலை 5.00 மணி ஆகும். பெறப்பட்ட விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு, தகுதியான விண்ணப்பங்கள் காவல் துறை NOC பெற்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பரிந்துரையுடன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்படும்.

மேலும் விவரங்களுக்கு வேலூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களை அலுவலக நேரங்களில் 0416–2221721 அல்லது 7401703483 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

ஒ/-
மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர்

செ.ம.தொ.அ. 24/7/17
வேலூர்– 9.